**STARTING TIME 12.08 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 22/2019**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Grade-II Bench Clerk of this court, on 02.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : எமிமால் Father's Name : வேலு

Address : சோமசுந்தரம் ஹரிஜன காலனி, சோமசுந்தரம் கிராமம்,
சோளிங்கர் வட்டம், ராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 37

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

6. எஸ்தரம்மாள் திருமணத்திற்காக வேண்டி கடன் வாங்கினார் என்ற விவரத்தை அடமான பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால், சொல்லப்பட்டுள்ளது. அந்த அடமானப் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். எஸ்தரம்மாள் திருமணத்திற்காக வேண்டி அடமானக் கடன் பத்திரம் எழுதிதரவில்லை என வாதி சொல்கிறார் என்றால், சரியல்ல.

7. தாவா சொத்தை நாங்கள் கிரையம் பெறுவதற்கு முன்பு அதில் என்ன பயிர் செய்து வந்தது என்ற விவரம் தெரியுமா என்றால், தெரியும். அதற்கான அடங்கல் பதிவேடுகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. எஸ்தரம்மாள் சுவாதீனத்துடன் கூடிய அடமானக் கடன் பத்திரத்தை எழுதி தரவே இல்லை என்றும், அதுபோல் எழுதிக் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. அடமான கடன் பத்திரம் எழுதியவர் சொத்தை விற்பனை செய்தால் அது

சரியா, தவறா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

8. தற்போது வரை வேலு என்பவர் பெயருக்கு கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்ததாக இருந்தாலும், தாவா சொத்தின் அனுபவம் தற்போது வரை வாதியின் வசமே உள்ளது என்றால், சரியல்ல. வேலு என்பவருக்கு தாவா சொத்தை பொறுத்து கிரையப் பத்திரம் எதுவும் எழுதிக் கொடுக்கவே இல்லை என்றும், அதுபோல் கிரையப் பத்திரம் எழுதிக் கொடுக்க பெருமாள் என்பவருக்கு அதிகாரமும் இல்லை என்றால், சரியல்ல. இந்த கிரையம் சட்டப்படி செல்லாது வாதியை கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல.

9. அம்மாகண்ணம்மாள், பெருமாள் என்பவருக்கு சுவாதீனமே கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. எஸ்தரம்மாள் பெயரில் பட்டா கொடுப்பதற்கு முன்பு முறைப்படி விசாரித்து தான் கொடுத்திருப்பார்கள் என்றால், அவர் பெயரில் பட்டாவே கொடுக்கவில்லை. நான் சொல்வது தவறு என்றும், எஸ்தரம்மாள் பெயரில் கொடுக்கப்பட்ட பட்டா பாஸ் புத்தகம் வாதி தரப்பில் வா.சா.ஆ.4–ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், அது பொய்யான ஆவணமாகும்.

10. எஸ்தரம்மாள் பெயரில் வழங்கிய பட்டாவை ரத்து செய்ய நடவடிக்கை எதுவும் எடுத்துள்ளோமா என்றால், எடுத்துள்ளோம். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். பட்டா யார் பெயரில் உள்ளதோ அவர் மட்டும் தான் சொத்தினை கிரையம் செய்ய உரிமை உள்ளது என்றும், அந்த வகையில் எஸ்தரம்மாளுக்கு மட்டும் தான் தாவா சொத்தை கிரையம் செய்ய உரிமை உள்ளது என்றால், சரியல்ல.

11. எஸ்தரம்மாளுக்கு தாவா சொத்தை கிரையம் செய்யும் உரிமை இருந்ததால் தான் அவர் கடந்த 03.12.1997 அன்று அசோகன் என்பவருக்கு தாவா சொத்துக்களை பொறுத்து வா.சா.ஆ.5 கிரையப் பத்திரத்தை எழுதிக் கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல, அவர் ஏமாற்றி தான் அந்த கிரையப்

பத்திரத்தை எழுதி வாங்கிக் கொண்டார்.

12. பெருமாள் என்பவருக்கு சொத்தை கிரையம் செய்யும் உரிமை உள்ளதா என்பதை விசாரித்து தான் அவரிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றிருக்க வேண்டும் என்றால், சரிதான், அவருக்கு உரிமை இருந்ததால் தான் அதை விசாரித்து கிரையம் பெறப்பட்டுள்ளது.

13. தாவா சொத்துக்களை வேலு கிரையம் பெற்ற போது அதில் எஸ்தரம்மாள் தான் பயிர் செய்து வந்தார் என்றால், சரியல்ல. வருவாய்துறையில் பட்டா வழங்குவதற்கு முன்பு சொத்தை நேரில் பார்வையிட்டு யாருடைய அனுபவத்தில் உள்ளது என்பதை விசாரித்து தான் பட்டா வழங்குவார்கள் என்றால், சரிதான்.

14. எஸ்தரம்மாள், அசோகன் பெயருக்கு எழுதி வைத்த வா.சா.ஆ.5 கிரையப் பத்திரத்தை ரத்து செய்ய நடவடிக்கை எதுவும் எடுத்தோமா என்றால், எஸ்தரம்மாள் பெயரில் இருந்த பட்டாவே பொய்யானது என சொல்லி நடவடிக்கை எடுத்தோம். எனது தகப்பனாரான 4-ம் பிரதிவாதி தாவா சொத்தை அனுபவித்து வந்தார் என்பதற்கான என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால், வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன்.

15. எஸ்தரம்மாள், அசோகன் பெயருக்கு எழுதி வைத்த வா.சா.ஆ.5 கிரையப் பத்திரத்தை எழுதிக் கொடுத்த பிறகு, தாவா சொத்திற்கு அசோகன் பெயரில் வழங்கப்பட்டுள்ள வரி ரசீதுகள் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், அது பொய்யாகும். தாவா சொத்திற்கான பட்டா 5-ம் பெயரில் அசோகன் பெயரில் உள்ளதை ரத்து செய்ய ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், 5-ம் பிரதிவாதி பெயரில் பட்டா எதுவும் இல்லை, எனது தகப்பனார் பெயரில் தான் உள்ளது.

16. வாதி பெயருக்கு அசோகன் எழுதிக் கொடுத்த கிரையம் குறித்து தெரியுமா என்றால், தெரியும். அந்த கிரையப் பத்திரத்தின் பேரில் வாதி தான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால், சரியல்ல. தாவா சொத்து

பெருமாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றும், எனவே அவர் எனது தகப்பனாரான 4–ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கவே உரிமை இல்லை என்றால், சரியல்ல. எனவே, வாதி தாவாவில் கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

16–ம் பிரதிவாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME 12.35 P.M.**

Special Subordinate Judge

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.03.02 15:44:33 +0530